விவாதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் பிரச்சினையை இந்த அவையில் எழுப்புவதாக இருந்தாலும் அவைத் தலைவர் அனுமதித்தால்தான் எழுப்புவதற்கு நியாயம் உண்டே தவிர, அனுமதிக்காவிட்டாலும் ஒரு பிரச்சினையை எழுப்புவேன் என்றால், இந்த அவையில் ஓர் எதிர்ப்புத் தெரிவிப்பதற்காகத் தொடங்குகிற ஒரு காரியமாகத்தான் நான் இதைக் கருதுகிறேன். எனவே, பேரவைத் தலைவர் அவர்கள் விதிப்படியும், முறைப்படியும் அனுமதிக்கத் தேவையில்லை. (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ஓ. பன்னீர்செல்வம், வேறு ஏதாவது பொருள் குறித்து* raise *பண்ணுகிறீர்களா? (குறுக்கீடு) வேறு விஷயம் குறித்து ஏதாவது* raise *பண்ணுகிறீர்களா? (குறுக்கீடு) நான் என்னுடைய முடிவைச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) வேறு ஏதாவது விஷயம் இருக்கிறதா என்றுதான் கேட்கிறேன். (குறுக்கீடுகள்) இந்தப் பிரச்சினையை எடுக்க முடியாது என்று நான் சொல்லிவிட்டேனே! (குறுக்கீடுகள்) விதியிலே தெளிவாக இருக்கிறது. விதி 65,* sub-clause (iv)-*ஐ எடுத்துப் படித்துப் பாருங்கள். (குறுக்கீடு) ஒரு வழக்கு, ஒரு விஷயம் ஏற்கெனவே விவாதிக்கப்பட்டதற்குப்பிறகு மீண்டும் அதை எடுக்கக்கூடாது என்று விதியில் இருக்கிறது. (குறுக்கீடு) அதில், அதற்குப்பிறகு கூடுதல் விவரங்கள் இருக்கின்றன என்றால்,* police station-*லே போய்ச் சொல்லுங்கள்.* The case is pending in police station. The case is under investigation. (Interruptions)

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்

(இ) வறட்சி மாவட்டங்களில் உள்ளோர்க்கு நிவாரண நிதி வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அடுத்தது, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.*

2010 மே 14]

முற்பகல் 9-35

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், வேலூர், திருவண்ணாமலை, நாமக்கல், திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்கள் கடுமையான வறட்சியில் சிக்கி, அங்கே குடிநீர்த் தட்டுப்பாடு அதிகமாக இருக்கிறது என்பதை எல்லோரும் வலியுறுத்தியதற்கேற்ப, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் முதற்கட்டமாக குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக நிதி ஒதுக்கி, தவித்த வாய்க்குத் தண்ணீர் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட, இன்னும் கடுமையான வறட்சி நிலவுகின்ற காரணத்தினாலே, ஒதுக்கிய நிதி பற்றாக்குறையாக இருப்பதால், கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டும். அதே நேரத்தில், இந்த வறட்சி மாவட்டங்களில் உணவிற்கே வழியில்லாமல் விவசாயிகள், கூலிகளெல்லாம் அலைந்து கொண்டிருக்கின்ற காரணத்தினாலே, இந்த மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவித்து, இந்த மாவட்டங்களில் வசிக்கக்கூடியவர்களுக்கு நிவாரண நிதியாக, குடும்பத்திற்கு ரூபாய் 5 ஆயிரம் என்ற வகையில் நிவாரண நிதி வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் மாண்புமிகு திரு. கோ.க. மணி அவர்கள் பல மாவட்டங்களைக் குறிப்பிட்டுச் சொல்லி, அந்த மாவட்டங்களில் ஏற்பட்டிருக்கக்கூடிய குடிநீர்ப் பிரச்சினையை அடிப்படையாக வைத்து, ஏற்கெனவே அதற்கான நிதியை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியோடு ஒதுக்கப்பட்டிருந்தாலும், இன்னும் சில மாவட்டங்களில் அது போதுமான வகையில், அந்தக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய வகையில் இல்லை; எனவே, மேலும் அதற்கு வேண்டிய நிதியொதுக்கீடு செய்ய வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை எடுத்து வைத்திருக்கிறார்கள். எனவே, ஒவ்வொரு மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர்கள் மூலமாக நாங்கள் தொடர்ந்து அதைக் கண்காணித்து, அவர்களிடமிருந்து தொடர்ந்து அறிக்கையைப் பெற்று வருகிறோம். எனவே, திரு. மணி அவர்கள்

சொன்னதுபோல, எந்த மாவட்டத்திற்கு அப்படி அவசியம் ஏற்படுகிறதோ, அந்த நேரத்தில் நிச்சயமாக அரசு அதற்குரிய நிதியை ஒதுக்கி, அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) சென்னை, தீ விபத்தால் பாதிக்கப்பட்டோருக்கு கான்கிரீட் வீடுகளும், சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அடுக்குமாடி வீடுகளும் கட்டித் தருதல் மற்றும் கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தைப் பேரூராட்சிப் பகுதிகளுக்கும் விஸ்தரித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. ஜெயக்குமார், வேறு பிரச்சினையாக இருந்தால் மட்டும் நீங்கள் பேசலாம். (குறுக்கீடு) சரி சொல்லுங்கள்.

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் பிற்பகல் 2-30 மணியளவில் சென்னை, திருவான்மியூர் மீனவர் குப்பத்தில் ஏற்பட்ட கடுமையான தீ விபத்தின் காரணமாக, சுமார் 350-க்கும் மேற்பட்ட குடிசைகள் எரிந்து, தரைமட்டமாகி சாம்பலாகியிருக்கின்றன. பல பேர் காயமுற்றிருக்கின்ற நிலையில், குடிசைகள் தீப்பிடித்து எரிகின்ற சூழ்நிலை ஒரு புறம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் மாவட்டங்களில் ஒரு சர்வே எடுக்கப்பட்டு, எவ்வளவு குடிசைகள் இருக்கின்றன என்பதை அறிந்து, அவற்றை கான்கிரீட் வீடுகளாகக் கட்டித் தருவோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், அந்தத் திட்டத்தில் சென்னை சேர்க்கப்படவில்லை. எனவே, சென்னையில் அந்தத் திட்டம் சேர்க்கப்படுகின்ற நிலை உள்ளதா? ஏற்கெனவே குடிசை மாற்று வாரியம் ஒன்று உள்ளது. குடிசைப் பகுதிகளை அகற்றி, அந்தக் குடிசைப் பகுதிகளில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டுகின்ற திட்டம். ஏற்கெனவே அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டவர்களுக்கு, அந்த அடுக்கு மாடிக் குடியிருப்புகளைப் பெற்றவர்களுக்கு இலவசமாக, கட்டணம், வாடகை எதுவும் வசூல் செய்யாமல், அவர்களுக்கே சொந்தமாக்குவதுதான் இந்த concept-ன் சரியான தீர்வாகும். எனவே, ஒரு பக்கம் கிராமங்களிலே இலவச வீடுகளைக் கட்டிக் கொடுத்துவிட்டு, சென்னையில் இருக்கின்ற குடிசை மாற்று வாரியத்தின்மூலம் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளில் குடியிருப்பவர்களிடம் வாடகை வசூல்